*6*

# தேவனால் ஆறுதல் அடைதல்

## (2 கொரிந்தியர் 1:3-11; 7:5-16)

*“ஆகிலும், ... தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்” (7:6).*

*வாழ்வின் சுமைகளில் இருந்து நம்மை விடுவிக்க இயேசு நமக்கு வாக்குத்தத்தம் வழங்குகிறார் என்பது வேதாகமம் முழுவதிலும் உள்ள மா பெரும் ஆய்வுக்கருத்துகளில் ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் “தங்கள் ஆத்துமாக் களுக்கு இளைப்பாறுதல்” கண்டறிகின்றனர் என்பதைப் புதிய ஏற்பாடு திரும்ப ஒலிப்பதாகக் காணப்படுகிறது (cf. மத்தேயு 11:28-30); எவரொருவராலும் சுமக்கக்கூடாத “பாரமான சுமைகளைக் கட்டி” மனிதர்மீது வைக்கிற (மத்தேயு 23:4) சட்டம்பேசுபவர்கள், எவரொருவரும் கைக்கொள்ள இயலாதவற்றை வற்புறுத்துகின்றனர். மற்றவர்கள் தங்கள் உணர்வுத் தூண்டுதலுக்கு, அடிமைத்தளையின் அடக்கி வைக்கும் பாரத்தின்கீழ் உள்ளனர், ஆனால் கிறிஸ்தவர், தமது மிகமோசமான உணர்வுத் தூண்டுதல்களில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சுமையை எடுத்து விடுதல் என்பது கிறிஸ்தவத்தின் நற்செய்தியாக உள்ளது.*

*இவ்வரலாற்றின் இன்னொரு பக்கமானது கிறிஸ்தவர்களுக்குத் திகைப் புக்குரியதாக வருகிறது. செயல்துடிப்பான சீஷத்துவமானது மிகமிக பாரமான தாகவும் இருக்கக்கூடும். எனது மிக முந்திய நினைவில் இருந்து நான், சபைவாழ்வின் பல பாரமான சுமைகள் கலந்துரையாடப்பட்டபோது அங்கிருந்ததை நினைவுகூருகிறேன். இறுக்கமான ஒரு சூழ்நிலை இன்னொன்றால் பின்தொடரப்பட்டது. அந்தக் கணங்களில் பல ஏமாற் றமான விளைவுகளை விளைவித்தன. மற்ற நிகழ்ச்சிகளில், உறுதிப்பாடு ஒருக்காலும் வளர்வதாகக் காணப்படாதவர்களைப் போஷித்தல் என்ற சுமைகள் இருந்தன. கனத்த பாரங்கள் தங்கள்மீது அழுத்திக்கொண்டிருந்ததால் ஏமாற்றத்தையும் மன உலைச்சலையும் வெளிப்படுத்திய செயல்துடிப்பான பல கிறிஸ்தவர்களுடன் நான் பேசியிருக்கிறேன்.*

*கிரேக்கர்கள், அட்லஸ் என்பவன் உலக உருண்டையை மேல் நோக்கித் தூக்கிவைத்திருப்பதாக சித்தரித்தல் போன்று, சபையை நாமே தூக்கிப்பிடித்திருப்பதாகச் சித்தரிக்கும்போது நாம் பாரங்களை அடிக்கடி மிகைப்படுத்திக் கூறுகிறோம். சபையை மேல்நோக்கித் தூக்கிப்பிடித் திருப்பதில் நாம் தனியாக அதைச் செய்வதாக நினைத்தாலும், நாம் ஒருக்காலும் தனியாக நிற்பதில்லை. ஆனால் சபை வாழ்வு என்பது பாரமான சுமையை உள்ளடக்குகிறது. அவைகள் நிம்மதி அளிப்பதில்லை என்பது மிகவும் சலிப்பூட்டும் அம்சங்களில் ஒன்றாக உள்ளது. அடிக்கடி சிறிதே எச்சரிப்புடன், பிரச்சனைகள் எல்லாப் பக்கத்திலிருந்தும் வருகின்றன. அவைகள் நேர்மை*

*யான கருத்து வேறுபாட்டின் மன இறுக்கங்களை உள்ளடக்கியிருக்கலாம். அவைகள், அன்பார்ந்த நண்பர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளில் உதவுவதை உள்ளடக்கியிருக்கலாம். இந்த அனுபவங்கள் நம்மை இளைப்படையச் செய்து, நாம் வெறுமனே விட்டுவிட்டுச் சென்று விட முடியாது என்று அறியச்செய்கின்றன. இவ்வாறாக நமது போராட்டங்களுக்கு நாம் முடிவைக் காணாததாலும் ஊழியத்தில் இருந்து ஓய்வுபெறுவதில்லை என்பதாலும், சபைவாழ்வின் சுமைகள் அடிக்கடி அதிகமாகின்றன. இது, கிறிஸ்தவ வாழ்வு என்பது சுமைகளில் இருந்து விடுதலையாகியிருத்தலாகும் என்று எதிர் பார்ப்பவர்களுக்கு அடிக்கடி ஏமாற்றமாயிருக்கும்.*

*2 கொரிந்தியர் நிருபத்தின்படி, உண்மையான சீஷத்துவம், ஊழியத்தின் ஏமாற்றங்களினால் ஏமாற்றவடைவதில்லை. இந்த சுமைகள், கிறிஸ்துவின் ஊழியக்காரனுடைய முற்றிலுமான "பணி விவரிப்பின்" பகுதியாக இருக்கின்றன என்பதை அவர் புரிந்துகொள்கிறார். பவுல் ''கிறிஸ்துவுக்குரியவர்'' (10:7) அல்லது ஒரு ''கிறிஸ்தவர்'' என்று நிரூபிக்கும்படி அவருக்கு அறைகூவல் விடப்பட்டபோது, அவர் தமது உழைப்புகளைப் பற்றிக் கூறினார். அவர் தமது ஆவிக்கு "அமைதலில்லாத" நிலையை அனுபவித்தார் (2:13); தொந்தரவு விளைவிக்கும் ஒரு சபை அவருக்கு உறக்கமற்ற இரவுகளைக் கொடுத்திருந்தது. அவர் கலகக்கார மக்களின் காரணமாக வேதனையை அனுபவித்தார் (2:1-4). அத்துடன் கூடுதலாக, அவர் தொடர்ந்திருந்த தமது உடல் சுகவீனத்தினால் பிரச்சனையையும் (12:7), இளைப்பையும் உபத்திரவத்தையும் அனுபவித்தார். குறிப்பாக ஒரு விரிவான கூற்றில் பவுல், "பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம்" இருந்ததால் உபத்திரவம் மிகவும் கடுமையானதாக இருந்தது என்று கூறுகிறார் (1:8). அது ஒரு பாரம் அவரை நசுக்கப்போவது போலிருந்தது. பவுலின் ஊழியம் சுமைகளைத் தவிர வேறெதையும் கொண்டுவரவில்லை. போராட்டத்திற்கு முடிவு எதுவும் காட்சியில் காணப்படவில்லை.*

*2 கொரிந்தியர் நிருபத்தின் தொடக்கப்பகுதி (1:3-11) இந்த ஆய்வுக்கருத்தால் நிரப்பப்பட்டுள்ளது. வழக்கமாகப் பவுல் தமது நிருபங்களை, அவற்றின் பிரதான பாடக்கருத்துக்களை உள்ளடக்குவதான ஒரு நன்றிசெலுத்துதலுடன் தொடங்குகிறார் (cf. ரோமர் 1:8-17; 1 கொரிந்தியர் 1:4). 2 கொரிந்தியர் நிருபத்தின் ''நன்றிசெலுத்துதல்'' பகுதி, இப்புத்தகம் முழுவதிலும் நாடப்பட்டுள்ள ஒரு ஆய்வுக்கருத்தான, வேதனையைக் குறிப்பிடுகிறது (1:4, 6, 8; 2:4; 4:17; 6:4; 7:4; 8:2, 13). கிறிஸ்தவர்களின் உபத்திரவங்களுக்கு ஒரு குறிப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது (1:5, 6). அத்துடன் கூடுதலாக அவர், "மரண தண்டனை" பெற்றிருந்ததாகத் தாம் நினைத்த ஒரு வேளையைப் பற்றியும் குறிப்பிடுகிறார் (1:9). இந்த நிகழ்ச்சியைப்பற்றி நாம் எந்த விபரத்தையும் அறிவதில்லை, ஏனெனில் கிறிஸ்துவின் ஊழியராக இருப்பதில் உள்ளடங்கியிருக்கும் சுமைகள் பற்றி நமக்கு நினைவூட்டப் பவுல் இதை, இங்கு மாத்திரம் உள்ளடக்குகிறார். அவர் கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு சுமைகளுக்கு நமது கவனத்தை இழுத்தல் மூலம் இந்த நிருபத்திற்கான தொனியை அமைக்கிறார்.*

*கிறிஸ்துவுக்கு ஊழியம் என்பது ஏன் ''நசுக்குவதாக'' இருக்க வேண்டும்? 1:5ல் பவுல் தமது வாசகர்கள் புரிந்துகொண்டுள்ளனர் என்று யூகிப்பதாகக் காணப்படுகிறது. "கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில்*

*பெருகுகிறதுபோல" என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை உண்மை ஒன்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: இயேசு "தனியாகச் சிலுவையைச் சுமக்கிறதில்லை."* NEB *வேதாகமம் இவ்வசனத்தைத் தக்கவகையில் தரவழைக்கிறது: "கிறிஸ்துவினுடைய பாடுகளின் பாத்திரம் நிரம்பிவழிகிறதுபோல, நாமும் அவருடன் பாடுபடுகிறோம் ... ." "கிறிஸ்துவின் பாடுகள்" சிலுவையில் அறைப்பட்டதுடன் முடிவடையவில்லை. அவைகள் அவரது மக்களின் வாழ்வில் நீட்டிக்கப்பட்டன. இயேசு ஒருமுறை தமது சீஷர்களிடத்தில், அவர்கள் தம்மைப் பின்பற்றுவதற்கு "சிலுவையை எடுத்துக்கொண்டு" வரவேண்டியிருக்கும் என்று கூறினார் (மாற்கு 8:34). எண்ணற்ற வேளைகளில் பவுல், கிறிஸ்துவின் பாடுகளில் "ஐக்கியம்" (அல்லது "பங்கேற்றல்") என்பதைப் பற்றி வரைவளவுச் சொற்றொடர்களில் பேசுகிறார் (பிலிப்பியர் 3:10). கலாத்தியருக்கு அவர், "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:17). கொலோசெயருக்கு அவர், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை ... நிறைவேற்றுகிறேன்" என்று எழுதினார் (கொலோசெயர் 1:24). கிறிஸ்துவுக்கு ஊழியம் என்பது பாரமானதாக உள்ளது, ஆகையால் இதினிமித்தம் கிறிஸ்துவின் பாடுகள் சபையில் தொடர்கிறது. நாம் மற்றவர்களின் வேதனையினால் பாரப்பட்டிருக்கும்போது, கிறிஸ்து தொடங்கிய பாடுகளில் நாம் பங்கேற்கிறோம்.*

*நம்மில், சபைவாழ்வின் சுமைகளை மாயத்தோற்றமானதாகக் காண்பவர்கள் கிறிஸ்துவின் நிமித்தமாகப் பவுலின் மனவேதனையை அவர் ஏற்றுக்கொள்வதில் உள்ள ஆரோக்கியமான உண்மைக்கோட்பாட்டைக் கண்டறிய முடியும். அவரது செயலின் சுமைகள், ஆசீர்வாதமான கிறிஸ்தவ வாழ்வில் துரதிர்ஷ்டவசமான இடைமறித்தல்கள் என்பதாக ஒருக்காலும் விவரிக்கப்படுவதில்லை. "எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை" என்ற அழுத்தும் பாரம் (11:28), இளைப்படையச் செய்யும் சுமைகள் அடங்கிய கிறிஸ்தவ வாழ்வின் அத்தியாவசியமான பாகமாக இருந்தது. இந்த உண்மை, நாம் பின்வரும் கேள்வி கேட்கக் காரணமாகிறது: கிறிஸ்தவ வாழ்வைப் பற்றிய நற்செய்தி எங்கே உள்ளது?*

## *சகலவிதமான ஆறுதலின் தேவன் (1:3)*

*1:3-11ல் உள்ள விவரிப்பின் இந்தக் கணங்களை நன்றி செலுத்துதலின் சந்தர்ப்பப்பொருளில் பவுல் நினைவுக்குக் கொண்டுவருகிறார் என்பது, கிறிஸ்தவ வாழ்வின் துன்பங்கள் மற்றும் சுமைகளுக்குப் பவுலின் குறிப்புகள் பற்றிய குறிப்பிடத்தக்க உண்மையாக உள்ளது! கிறிஸ்தவமானது சுமையானதாக இருக்கக்கூடும் என்று நமக்குத் தகவல் அளிப்பதற்காக அவர் இந்த கணங்களை நினைவுக்குக் கொண்டுவரவில்லை, ஏனெனில் அவர் இந்தப்பகுதியைப் பின்வரும் துதியுடன் தொடங்குகிறார்: "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்." தேவனுடைய வல்லமை மற்றும் இரக்கம் ஆகியவற்றின்மீது வலியுறுத்தம் உள்ளது. புதிய ஏற்பாட்டின் மற்ற இரு இடங்களில் நிருபத்தின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "தேவனுக்கு ஸ்தோத்திரம்" (எபேசியர் 1:3; 1 பேதுரு 1:3) என்ற இந்தச் சொற்றொடரானது தேவனுக்கு நன்றியுணர்வுடன் பதில்செயல் செய்வதற்குப் பாரம்பரிய*

மான யூதத்துவ வழியாக உள்ளது (cf. 11:31; லூக்கா 1:68; ரோமர் 1:25; 9:5). வேதனைக்கு யோபு "... கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21) என்று பதில் அளித்திருந்தது போலவே, பவுல் தமது சுமைகள் பற்றிய விவரங்களை, நன்றிசெலுத்துதலின் வார்த்தைகளுடன் தொடங்குகிறார்.

பவுல் தமது விசுவாசம் தம்மிடம் கொண்டுவந்து சேர்த்திருந்த சுமைகளை எவ்வாறு தாங்கக்கூடியவராக இருந்தார் என்று நாம் வியப்படைந்தால், "சகலவிதமான ஆறுதலின்" தேவன் (1:3) பற்றிய அவரது கண்ணோக்கில் இதற்கான பதில் காணப்படுகிறது. "ஆறுதல்" என்ற வார்த்தை பவுலின் மற்ற எல்லா நிருபங்களையும் ஒன்றாக வைத்துக் காண்பதைக் காட்டிலும் 2 கொரிந்தியர் நிருபத்தில் அதிகம் அடிக்கடி வருகிறது. 1:3-8ல் இவ்வார்த்தை பத்துமுறைக்கும் குறையாமல் வருகிறது. பவுல் கிறிஸ்துவின் நிமித்தம் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி அதிக விபரமாகப் பேசும் ஒரு நிருபத்தில், தெய்வீக ஆறுதல் பற்றிய வார்த்தைகள் அடிக்கடி காணப்படுவது தற்செயலான நிகழ்வல்ல. தேவன் "எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" என்பதால் (1:4) பவுல் உபத்திரவத்தில் நிலைநிற்க முடிகிறது. அவரது சுமைகள் ஒருக்காலும் தனியாகச் சுமக்கப்பட்டிருக்கவில்லை.

தேவன் "நமது சகல உபத்திரவத்திலும் நம்மை ஆறுதல்படுத்துகிறார்" என்பது வேதாகமத்தினுடைய பழைய ஆய்வுக்கருத்தாக உள்ளது. விசுவாசம் என்பது வேதனை இல்லாத நிலையை உள்ளடக்குகிறது என்று வேதாகமம் ஒருக்காலும் கருத்துத் தெரிவிப்பதில்லை. பவுல் ஒரு கிறிஸ்தவர் ஆனபோது, அனனியாவிடத்தில் கர்த்தர், "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்று கூறினார் (நடபடிகள் 9:16). பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள், தேவன் இல்லாதிருந்தார் அல்லது மறைவாயிருந்தார் என்று தங்களைப் பயப்படச் செய்த தனிமையை அடிக்கடி அனுபவித்தனர். இஸ்ரவேல் தோல்வியடையச் செய்யப்பட்டு அதன் நகரம் அழிந்துபோகும்படி விடப்பட்ட தருணம் இருந்தது. "... அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை ... தேற்றுவார் இல்லை" (புலம்பல் 1:2, 9). அவள், "இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்; என் கண், என் கண்ணே நீராய்ச்சொரிகிறது; என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்" என்று கூறுகிறாள் (புலம்பல் 1:16).

துன்ப வேளையில் தேவன் ஒருவர் மாத்திரமே ஆறுதலைக் கொண்டுவர முடியும். சங்கீதக்காரர், "உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" என்று கூறுகிறார் (சங்கீதம் 23:4). வேதவாக்கியத்தில் மிகவும் அழகிய வசனப்பகுதிகள் ஒன்றில், தேவன் தனிமைப்பட்ட தமது மக்களிடத்தில், "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" என்று கூறுகிறார் (ஏசாயா 40:1, 2).

தனிமைப்பட்ட மக்களை ஏசாயா ஆய்வுசெய்கிறபோது, அவர் "துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய" (ஏசாயா 61:2) ஒருவர் வரும் நாளை முன்னெதிர் நோக்குகிறார். பவுல், தேவனை "சகல ஆறுதலின் தேவன்" என்று விவரிக்கிறபோது, அவர் தமது மக்களின் வரலாற்றை நினைவுக்கு

கொண்டுவருகிறார். தேவன் வேதனையைத் தடுப்பதில்லை, ஆனால் அவர் ஆறுதலின் தேவனாக இருந்துள்ளார்.

"ஆறுதல்" என்ற வார்த்தை, தேவன் "நமது சகல உபத்திரவத்திலும் நம்மை ஆறுதல் படுத்துகிறார்" என்று பவுல் விவரிக்கும் அவரது வெற்றிகர மான ஆவியைத் தவறவிடுமளவுக்கு மிகவும் பலவீனப்படுத்தப்பட்டும் மலிவாக்கப்பட்டும் உள்ளது. ஆறுதல் என்பது, புலம்புகிற ஒருவருக்கு ஆறுதல்தரும் வார்த்தையைக் கூறுதலுக்கான நமது முயற்சிகள் என்று நமக்குக் கருத்துத் தெரிவிக்கலாம். நாம் "சௌகரியமான வருமானம்" மற்றும் "வசதி யான இல்லம்" ஆகியவற்றைப் பற்றியும் பேசுகிறோம். வேதாகமத்தில் "ஆறுதல்" என்பது, இரக்கமான ஒரு வார்த்தை அல்லது நிறைவான ஒரு அமைதிப்படுத்தும் மருந்து என்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக உள்ளது. தேவனின் ஆறுதல் என்பது பலப்படுத்தவும் இரட்சிக்கவுமான அவரது வல்லமையாக உள்ளது.

தீர்க்கதரிசி, "சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே," என்ற வார்த்தைகளைக் கொண்டு பெருவருத்தத்தில் இருந்த மக்களுக்கு உரையாற்றியபோது, இந்த அர்த்தமே கருத்தாகத் தெரிவிக்கப்படுகிறது (ஏசாயா 54:11). பின்பு அவர், "அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன்" என்று கூறுகிறார் (ஏசாயா 57:18). ஆகவே, தேவனுடைய ஆறுதல் என்பது, மீட்பதற்கும் குணமாக்குவதற்கும் அவர் கொண்டுள்ள வல்லமையாக உள்ளது.

## விரிவான ஒரு நினைவு (1:8-11)

தேவன் பவுலுக்கு உதவ வந்தவேளை பற்றிய விரிவான நினைவைப் பவுல் கொண்டுள்ளார். அவர் ஆசியாவில் உபத்திரவத்தை அனுபவித்தபோது (1:8) அது நடந்தது. அவர், "பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக" மற்றும் "பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தத்தை" அனுபவித்தார். இந்த உருவகம், அதிகமாகச் சுமையேற்றப்பட்ட சரக்குக் கப்பல் ஒன்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. "வருத்தம்" என்பது அவர் தமது இக்கட்டான நிலையிலிருந்து வெளியேற ஒரு வழியைக் கணக்கிட முடியாதிருந்த நிலையை அவர் உணர்ந்தறிந்ததைச் சுட்டிக்காண்பித்தது. அவர் தமது சொந்த ஆதாரமூலங்களில், எந்த ஒரு தீர்வையும் காண இயலாதவராக இருந்தார். ஊழியத்தின் சுமைகள் யாவும் அவற்றைச் சுமக்கலான அவரது திறனுக்கு மிஞ்சியவையாயிருந்தன. அவர் ஊழியத்தின் உடல்ரீதியான மற்றும் உணர்வுரீதியான அதிகசுமைகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்: சுகவீனம், வேதனை மற்றும் சபைகள் பற்றிய வருத்தமே (cf. 5:4; 11:28). சுமையை சுமக்க அவருக்கு வழி எதுவும் இல்லாதி ருந்தது. அது அவரை நசுக்குவது நிச்சயமாயிருந்தது.

அந்த அனுபவம் பவுலுக்கு, தேவனை "சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறார்" என்று விவரிக்க (1:4) வழிநடத்திய ஒரு கண்ணோக்கைக் கொடுத்தது. இதற்கு முன்பு பவுல், தேவனுடைய பலப்படுத்தும் பிரசன்னத்தைக் கணக்கிடத் தவறியிருந்தார். ஆனால் வருத்தத் தின் இந்தக்கணத்தில் பவுல், தம்மீதல்ல ஆனால் தேவனுடைய உயிர்ப்பிக்கும் வல்லமை மீது சார்ந்திருக்கக் கற்றுக்கொண்டார் (1:9). தேவனுடைய ஆறுதல்

*என்பது அன்பான வார்த்தைகளுடன் மட்டுப்படுத்தப்படாதிருந்தது. அது அவரை, மரண அழிவிலிருந்து மீட்பதற்கான வல்லமையாகவும் அவர் தமது ஊழியத்தைத் தொடர அவருக்குப் பலம் அளிப்பதாகவும் இருந்தது. அந்தக் கணத்தில் இருந்து பவுல், "இன்னும் தப்புவிப்பார்" என்பதைக் கண்டறிந்தார் (1:10).*

*நம்பகத்தன்மை வாய்ந்த கிறிஸ்தவம் என்பது, தேவன் நிமித்த மாகப் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நம்மை நாமே திறந்து வைப்பதைக் கொண்டுள்ளது. ஆனால் பவுல் நமக்கு நினைவூட்டுகிறபடி, நாம் நம்மீது சார்ந்திருப்பதில்லை. நமது விசுவாசம், நாம் "அதிகமாகப் பாரம்சுமத்தப்" பட்டு இருக்கிறோம் என்று நம்புகிறபோது, நம் பக்கம் வருகிற ஒருவரைப் பற்றிக் கூறுகிறது. பிற்பாடு பவுல் கூறுகிறபடி, "அந்தப்படி நான் பலவீன மாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (12:10).*

*"நமது உபத்திரவத்தில் நம்மை ஆறுதல்படுத்துகிறவர்" மீது பவுல் கொண்டிருந்தது போன்ற விசுவாசத்தை நாம் கொண்டிருக்க மனவிருப்ப மற்று இருப்பதாலேயே நமது ஊழியங்கள் அடிக்கடி தோல்வியடைகின்றன. சில நிகழ்வுகளில் நாம், நமது ஊழியங்களை, தேவனுடைய ஆறுதல் அளிக்கும் வல்லமைக்கு இடம் அளிக்காமல், நமது சொந்த ஆதாரமூலங்கள் மற்றும் விவேகத்திறமை ஆகியவற்றினால் நடத்தியிருக்கிறோம். நம்பகத்தன்மை வாய்ந்த ஊழியமானது, பாரங்கள் மற்றும் தெய்வீக ஆறுதல் ஆகிய இரண்டையும் அனுபவிக்கிறது. இவற்றில் ஏதொன்று இல்லாமற் போனாலும், அது நமது ஊழியத்தைச் செயல்விளைவற்றதாக்கும்.*

## *மற்றவர்களுடன் ஆறுதலைப் பகிர்ந்து கொள்ளுதல் (1:4-7)*

*தேவனுடைய ஆறுதல் பல வழிகளில் வருகிறது. பவுலுக்கு இது, ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருந்து அவரை விடுவித்தலின் மூலம் வந்தது. ஆனால் தேவனுடைய ஆறுதல் மற்ற மக்கள் மூலமாகவும் வருகிறது. பவுல் தேவனுடைய ஆறுதல் தரும் பிரசன்னத்தின் முகவரானார் என்பதே, 2 கொரிந்தியர் நிருபத்தின் தொடக்கத்தில் (1:3-7) அவரது பிரதான கருத்தாக உள்ளது. அவர் மற்றவர்களை ஆறுதல்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திற் காகவே தேவனால் ஆறுதல்படுத்தப்பட்டுள்ளார்: "எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி" ஆறுதல்படுத்தப்பட்டுள்ளார் (1:4). அவர், தாம் ஒருவர் மாத்திரமே பெரும்வருத்தத்திற்கு உள்ளானவராக இருப்பதில்லை என்பதை அறிகிறார்; அவர் அனுபவித்துள்ள - உணர்வுரீதியான, உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய - "அதே பாடுகளை" மற்றவர்களும் பகிர்ந்துகொள்கின்றனர் (1:6). தேவனிடத்திலிருந்து அவர் பெற்றுள்ள பலத்திலிருந்து மற்றவர்களும் நிச்சயமாகப் பலனடைவர். ஒருவர் தாம் ஏற்கனவே பெற்றுள்ள ஆறுதலை மற்றவர்களுக்குத் தர இருக்கிறார் என்ற நிலையில், அவர்கள் தங்கள் சொந்த சோதனைகளைச் சகித்தல் என்பதை சுலபமானதாகக் கண்டறியக்கூடும்.*

*பவுல் தமது சமீபத்திய சோதனைகளுக்கத் தேவன் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தார் என்பதை அறிந்தார். அவர், தாம் பெற்றிருந்த ஆறுதலைக்*

கொண்டு மற்றவர்களை ஆறுதல்படுத்தவேண்டியிருந்தது (1:4). 1:5ல் உள்ள மனதில் பதியும் ஒரு விளக்கத்தில், பவுல் கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் அவரது ஆறுதல் ஆகிய இரண்டின் "பெருக்கத்தையும்" விவரிக்கிறார். "பெருக்கம்" என்ற உருவகம், சபை என்பது "எந்த மனிதரும் ஒரு தீவாக இருப்பதில்லை" என்ற நிலைகொண்ட சமூகமாக உள்ளது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. நமது சுமைகள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நிரம்பி வழிந்தோடுகின்றன. அவ்வாறே, ஆறுதல் என்பது "பகிர்ந்து கொள்ளுதலாக" (1:7) மற்றும் "நிரம்பிவழிந்தோடும்" ஆறுதலாக உள்ளது. நாம் நமது சுமைகளுடன் தனித்து நின்றால் நாம் சுலபமாக நசுக்கப்படமுடியும். ஆனால் சபையில் உள்ள மற்ற வர்களின் கடந்தகால அனுபவத்தினால் நாம் பலப்படுத்தப்படும் நிலையானது நமக்கு நம்பிக்கையை அளிக்கிறது.

நமது தனிப்பட்ட சலிப்பு மற்றும் மனவேதனையின் அனுபவங்கள் நமது சிந்தைகளில் இடம் பெற நாம் அனுமதித்தால், நமது ஊழியங்கள் தோல்வி யடைகின்றன. தேவனுடைய ஆறுதல் என்பது மற்றவர்களின் மூலமாக நமக்கு வருகிறது. பலவீனத்தின் நேரங்களில் நாமும், பவுலைப்போல், தேவனுடைய வல்லமையைக் கண்டுபிடித்தால் இந்த செய்தி பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். நாம் "நசுக்கப்பட்டு" இருப்பதாகக் கண்டால், தேவனிடத்தில் இருந்து ஆறுதல் பெற்றவர்கள் அதை நம்முடன் பகிர்ந்துகொள்ளுதல் நமக்கு அவசியமாக உள்ளது. ஒருவருடைய சுமையானது நிறைவில் சமூகம் முழுவதற்கு ஒரு பய னுள்ள நோக்கத்திற்குப் பயன்படலாம். பவுல் கூறியபடி, "ஆறுதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்" (1:6).

## இன்னொரு தனிப்பட்ட அனுபவம் (7:5-16)

பவுல், மற்றவர்களை ஆறுதல்படுத்தும் ஆதாரமூலமாக மாத்திரம் இருக்கவில்லை; சில வேளைகளில், மற்றொரு கிறிஸ்தவர் மாத்திரமே அளிக்கக்கூடிய ஆறுதல் அவருக்குத் தேவைப்பட்டிருந்தது. அவர், "எப்பக்கத்தி லேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன" என்ற நிலையில் இருந்த வேளையும் காணப்பட்டது (7:5). தொந்தரவு விளைவிக்கும் சபையொன்றின் சூழ்நிலையானது அவரை உறக்கமற்ற இரவுகளுடனும் தீவிரமான உணர்வுரீதியான இளைப்படைதலுடனும் விட்டுச்சென்றது என்பது உறுதி: "நான் துரோவா பட்டணத்தில் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே, என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது" (2:13). தொந்தரவுமிக்க சபையொன்று பவுலை இளைப்படைந்தவராக்கியது. மனநிறைவற்ற மற்றும் கலகம் செய்த அதன் வரலாறு, அவரது பிரயாசங்கள் ஒன்றையும் விளைவிக்காதோ என்று தோன்றும்படி ஆக்கிற்று.

சபைத் தொந்தரவுகள் புதியவை அல்ல. பவுலின் சொந்தப் போராட்டங்கள் தவிர, கொரிந்து நகரிலிருந்த சபையின் வெளிப்படையான கலகமானது, அவருக்கு கணிசமான வேதனையைக் கொண்டுவந்தது (2:5). கொரிந்து நகரின் சபையில் இருந்த விடாப்பிடியான தொந்தரவுகள் அவரைப் பெரும்வருத்தத்தில் ஆழ்த்தின. இருப்பினும் அவர் நம்பிக்கை இழந்துவிடவில்லை, ஏனெனில் கொரிந்தியர்களிடத்திலிருந்து தீத்து நற்செய்தியைக் கொண்டுவருவார் என்ற

நம்பிக்கையைப் பவுல் பற்றிக்கொண்டிருந்தார்.

தீத்துவிடமிருந்து வந்த செய்தியானது மிதமிஞ்சிய சந்தோஷத்திற்கான ஆதாரமூலமாக இருந்தது. கொரிந்தியர்கள் "மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டிருந்தனர்" (7:9). அவர்களின் துக்கமானது விரோதத்திலோ அல்லது விசுவாசத்தைக் கைவிடுதலிலோ முடியவில்லை, ஏனெனில் அது "தேவனுக் கேற்ற துக்கமாய்" இருந்தது (7:10). கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல் பற்றிப் பவுல் அடிக்கடி பேசுவதில்லை. இவ்வசனப்பகுதியானது, நமது தோல்விகள், மனந்திரும்புதலை உண்டாக்குகிற "தேவனுக்கேற்ற துக்கத்திற்கு" நம்மை வழிநடத்த முடியும் என்பதுபற்றிப் பவுலின் உறுதிப்பாட்டிற்கான அரிதான நினைவூட்டுதலாக உள்ளது. அளவிடக் கடினமானவற்றின் ஆதாரமூலமாக உள்ளவர்கள் மாறக்கூடும்.

தீத்துவின் வருகையானது பவுலுக்குப் புதிய ஆறுதலின் ஆதாரமூல மாக இருந்தது: "ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்" (7:6). இந்த நிகழ்ச்சியானது, தேவனுடைய மக்கள் ஒருவர் மற்றவருக்கு ஆறுதல் அளித்தல் பற்றிப் பரிந்துபேசும் வழிக்கு ஒரு உதாரணமாக உள்ளது. கொரிந்தியர்களின் இருதய மாற்றத்தினால் தீத்து ஆறுதல் படுத்தப்பட்டபோது, தீத்துவினால் பவுல் ஆறுதல் படுத்தப்படுகிறார். கொரிந்தியர்களால் ஆறுதல்படுத்தப்பட்ட தீத்து, பவுலை ஆறுதல் படுத்தக்கூடியவராக இருக்கிறார். இவ்வசனப்பகுதி நிம்மதி யையும் சந்தோஷத்தையும் எதிரொலிக்கிறது. கிறிஸ்தவ வாழ்வு என்பது, பார மான சுமைகளைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது. பவுல், "இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ... மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்" என்று கூறுகிறார் (7:9). அவர், இளைப்பாறுதல் அடைந்த தீத்துவின் சந்தோஷத்தைப் பற்றியும் பேசுகிறார் (7:13).

இந்தப் பகுதியை, "ஆகையால் எல்லாவிதத்திலும் உங்களைக்குறித்து எனக்குத் திடநம்பிக்கை உண்டாயிருக்கிறதென்று சந்தோஷப்படுகிறேன்" என்ற வார்த்தைகளுடன் அவர் முடிக்கிறார் (7:16). சபையை அதிகம் தொந்தரவு செய்த மனவேதனையானது, சபை வாழ்வு என்பது ஒன்றுக்குப் பின் ஒன்றாக வேதனை நிறைந்த போராட்டத்தை உள்ளடக்கியது என்ற நம்பிக்கையற்ற உணர்வுக்கு வழிநடத்தலாம். ஆனால் சபை வாழ்வு என்பது எல்லையற்ற வகையில் இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. அன்புணர்வின் பிணைப்புகள், சந்தோஷம் மற்றும் பலம் ஆகியவற்றின் நினைவுகளை அளிக்கின்றன. அடிக்கடி இந்தப் பிணைப்புகள், சந்தோஷமற்ற கணங்களை நாம் மறக்கச் செய்யும் அளவுக்குப் பலமுள்ளவையாக இருக்கின்றன. கொரிந்தியர்கள் பவுலின் மீது கொண்டிருந்த "வாஞ்சை," "துக்கிப்பு" மற்றும் அவரைப்பற்றி அவர்களுக்கு உண்டாயிருந்த "பக்திவைராக்கியம்" ஆகியவற்றைப் பற்றித் தீத்து அறிக்கை செய்தார் (7:7). கடந்தகாலத்தின் மகிழ்வற்ற அம்சங்கள் மறக்கப்பட்டிருக்கையில், அவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ ஒப்புக்கொடுத்தலானது தங்களுடன் உபத்திரவப்படுகிற ஒருவர்மீதான பிரியத்தின் வகையை உண்டாக்கிற்று என்பதை ஒருக்காலும் மறக்கமாட்டார்கள். கொரிந்தியர்களைப் பற்றிச் சுருக்கமாக அறிந்திருந்த தீத்துவும்கூட, ஐக்கியத்தின் புதிய பிணைப்புகளினால் இருதயம் அசைக்கப்பட்டார். பவுல், "மேலும் நீங்களெல்லாரும் கட்டளைக்கு

*அமைந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் தன்னை ஏற்றுக்கொண்டதை அவன் நினைக்கையில், அவனுடைய உள்ளம் உங்களைப்பற்றி அதிக அன்பாயிருக்கிறது" என்று கூறுகிறார் (7:15).*

## முடிவுரை

*என் அனுபவமானது, செயல்துடிப்புள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் அனுபவம் போன்றதாக இருந்தால், கிறிஸ்துவுக்கான செயல்துடிப்புள்ள ஒரு ஒப்புக்கொடுத்தலானது, கருத்து வேறுபாட்டின் இறுக்கமான கணங்கள், நடத்துனர்கள் நிலையான விமர்சனத்திற் குள்ளாகும் காலவேளைகள், மற்றும் சுமையானது நசுக்கும் வேளைகள் ஆகியவற்றிற்குள் நம்மை வழிநடத்தும். மற்ற கிறிஸ்தவர்களுடன் நேர்மை யான கருத்து வேறுபாடுகள் மற்றும் பிறருடனான எனது ஊழியம் ஆகியவை ஏமாற்றத்தை விளைவித்த வேளைகளை நான் நினைவுகூருகிறேன். ஆனால் சக கிறிஸ்தவர்கள் எப்போதுமே தைரியத்தின் ஆதாரமூலமாக இருந்துள்ளனர். நாங்கள் உற்சாகப்படுத்த முயற்சி செய்திருந்தவர்களில் சிலர், கடைசியில் எங்களை உற்சாகப்படுத்தினர்! பவுல், தீத்துவின் வருகையினால் தேவனுடைய ஆறுதலைக் குறைவின்றி கண்டுகொள்ள முடிந்தது என்றால், சந்தேகத்திற்கு இடமின்றி, நமக்கு நற்செய்தியைக் கொண்டு வருபவர்களிடத்தில் தேவனுடைய கிரியையை நாம் காணமுடியும்.*

*ஊழியத்தின் மனவேதனையில் இருந்து நம்மை நீக்கிப்போடத் தேவன் நமக்கு மயக்க மருந்து ஒன்றை அளிக்காதிருக்கலாம், ஆனால் அவர் நமக்குப் பல வழிகளில் ஆறுதலை அனுப்புகிறார். அதை அவர், நல்ல நண்பர்கள், நல்ல செய்தி, மற்றும் பெருவருத்தத்திற்கு நம்மை ஒப்புவித்தலில் இருந்து நம்மைத் தடைசெய்யும் பலம் ஆகியவற்றின் மூலமாக அனுப்புகிறார்.*